Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# நாட்டுப்புற இசைக்கருவிகள்

Sandhiya Soundararajan, Dr. Sumathi & Dr. Saratha
BrideAcademy

ஆய்வு சுருக்கம்:

கலைகளின் பயன் அவை கையாளப்படும் சூழலை அடிப்படையாகக் கொண்டது மக்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்தும் வடிகால்களாகவும் கலைகள் விளங்குகின்றன. கலை ஆர்வத்தையும் ஆற்றலையும் வெளிக்கொண்ரும் வாயில்களாகவும் கலைகள் திகழ்கின்றன. ஒரு சமுதாயத்தின் பண்பாட்டினை அந்தந்த மொழிகளில் தோன்றிய இலக்கியங்களும் நாட்டுப்புற கலைகளிலும் நன்கு வெளிப்படுத்துகின்றனவாய் இருக்கின்றன. நாட்டுப்புறப் பாடல்கள் மூலம் சமுதாயத்தின் நிலையை கண்டறியலாம். மக்களுக்கு பயன்படும் நல்ல கருத்துக்களை நாட்டுப்புறப் பாடல்கள் எடுத்து இயம்புகின்றன. இப்படிப்பட்ட நாட்டுப்புற பாடல்களில் இடம்பெறும் பக்க பலமாகவும் பாடல்கள் பாடுவதற்கு ஏதுவாகவும் செயல்படும் இசைக்கருவிகளை பற்றியே இங்கு நோக்கலாம்.

முன்னுரை :

மனித சமுதாயம் பல காரணங்களால் பல பிரிவுகளால் வாழ்ந்திருந்த போதும் அவர்கள் ஒன்றிணைந்து கொண்டாடுவது திருவிழாக்கள் பண்டிகைகளும் ஆகும். தமிழகத்தில் பல ஆண்டுகளுக்கு திருவிழா நடைபெற்று வருகின்றன. இத்தகைய விழாக்களின் மூலம் கலையாற்றலும் கலை அனுபவம் மேலோங்கி வளர்ந்து கலைகள் வளர்ச்சிக்கு திருவிழாக்கள் தான் மூல காரணமாக ஆகின்றன. கலைகள் அனைத்தும் கோவில் விழாக்களோடு இணைந்துள்ளன. கோவில் திருவிழாக்களில் இறை வழிபாட்டிற்கு உதவும் வகையில் பலவிதமான நாட்டுப்புற கலைகள் நிகழ்த்தப்படுகின்றன. அவ்வகையில் நாட்டுப்புற பாடல்களுக்கு பயன்படுத்தப்படும் இசைக்கருவிகளை பற்றியே விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

1. வில் :

இது வில்லுப்பாட்டின் முக்கிய இசை கருவியாகும் வில்லினை உருவாக்க தேவையானவை. வில் கதிர் முனை குப்பிகள் படம் மாட்டு தோல் மணிகள் மணிகளை கோர்த்திட தேவையான வளையங்கள் கம்பிகள் கயிறுகள் போன்றவை. வில் கதிர் ஏறத்தாழ ஆறு மூல நீளத்தில் அமையும். இது பொதுவாக கூந்தற்பனையின் வைரம் பாய்ந்த அடி மரத் துண்டினின்று செதுக்கி எடுக்கப்படுகிறது. பொதுவாக பனைமரக் கதிரை பயன்படுத்துவர் கதிரின் இரு முனைகளும் குப்பிகள் பொறுத்த பெரும் இவை வெண்கலம் அல்லது பித்தளையால் ஆனது. நானாக பயன்படுத்தப்படும் வடம் மாட்டுத்தோல் முறுக்கால் ஆனது. கதிரில் குறிப்பிட்ட இடைவெளி விட்டு வளையங்கள் பொருத்தப்பட்டு இருக்கும். கதிரின் ஒரு பக்கம் ஆறு மணிகளும் மற்றொரு பக்கம் 5 மணிகளும் ஆக மொத்தம் 11 மணிகள் பொருத்தப்பட்டு இருக்கும். மணிகளின் எண்ணிக்கை ஒற்றைப்படையிலேயே அமைந்திருக்கும். கதை பாடும் அண்ணாவி எனப்படும் புலவர் தான் இவ்வில்லினை இயக்குவார். புலவர் கைக்கு ஒன்றாக இரு கோள்களை வைத்திருப்பார் அளவில் 11/2 அமைந்திருக்கும். இவற்றின்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

கைப்பிடியை அடுத்த சலங்கைகள் பொருத்தப்பட்டு இருக்கும் இவை வீசு கோள்கள் எனப்படும். இவ்விசை கோள்களை கொண்டு வில் நான் மீது புலவர் தாளத்திற்கேற்றவாறு தட்டும் போது கோளின் சலங்கை ஒலியும் வில் மணிகளின் ஒளியும் சேர்ந்து இணைய வில் ஒளி உண்டாகும்.

2. உடுக்கு :

இது உடுக்கை எனவும் அழைக்கப்படும். இருபுறவாய் பகுதிகளையும் இடைச் சுருக்கிய நடுப்பகுதியையும் கொண்டது உடுக்கை இதற்கு இரண்டு முகம் உண்டு. இது அளவில் மிகவும் சிறிய வெங்கலம் செம்பு மண்ணால் ஆனது. இரண்டு முகங்களும் தோலால் மூடப்பட்டிருக்கும் இதில் ஆறு துறைகள் கயிறுகளால் இணைக்கப்பட்டிருக்கும். இடக்கை துணியை பற்றி இருக்கும் வலது கை உடுக்கை இசைக்கும் உடுக்கை ஒளியை அதிகப்படுத்துவதோ குறைப்பதோ அதன் துணியை இறுக்கமாகவோ தளர்வாகவோ கட்டுவதன் மூலம் முடிகிறது. இது நான்கு காலங்களில் இசைக்கப்படும் தாள சொற்கட்டுகள் குடத்தில் ஒலிக்கும் சொற்கட்டுகளை ஒத்த இருக்கும். இவ்விரண்டும் ஒன்று சேர அமைவது வில்லுப்பாட்டின் சிறப்பு அம்சமாகும்.

3. குடம் :

பொதுவாக மக்கள் பயன்படுத்தி வரும் மண் குடம் செய்வது போல் அல்லாமல் தனிமுறையில் செய்யப்படுவது வில்லு குணமாகும். இதன் கழுத்து பகுதி உறுதியாகவும் வாய் விளம்பு வளைவின்றியும் இருக்கும். இதன் நடுப்பகுதியை கழுத்துடன் சேர்த்து குடம் செய்வார்கள். நெல்லை மாவட்டத்தை சேர்ந்த சில ஊர்கள் வில்லுக்கூடம் செய்வதில் புகழ்பெற்றுள்ளதுடம் வைக்கோல் புறியில் ஆன புரி மனையின் மீது வைக்கப்படும். இந்நிலையில் தான் குடத்தை கழுத்துடன் வில் கதறின் நடுப்புறம் சேர்த்து கட்ட பெறும் இயக்குவதற்கு துணையாக அமைவது துணிக்கருவி பத்தியாகும். பத்தி என்பது டேபிள் டென்னிஸ் மட்டையைப் போன்று அமைந்திருக்கும். இது கோள் அல்லது பனை மட்டையின் அடிபாகத்தில் செய்யப்பட்டிருக்கும். இது குடத்தின் வாயை விட சற்று பெரிதாக இருக்கும். இப்பத்தியை வளர்க்கையில் பிடித்துக் கொண்டு குடத்தின் வாய் புறத்தில் தாளத்திற்கு ஏற்றவாறு தட்டுவர் இதே நேரத்தில் சிறிய மரத்துண்டை இடது கையில் ஆட்காட்டி விரலுக்கும் நடுவிரலுக்கும் இடையே பிடித்துக் கொண்டு குடத்தின் கழுத்துக்கு கீழே உள்ள பகுதியை தட்டுவர். இவ்விரண்டு ஓசையும் சேர்ந்தும் அடுத்தும் இசைக்கப்படும். உடுக்கை தாளத்தின் இயக்கத்திற்கு ஏற்றவாறு குடமும் ஒத்த இசைக்கப்படும்.

4. தாளம் :

இரும்பு அல்லது பித்தளையால் செய்யப்படும் இக்கருவி சல் என்ற ஓசியை உடையதால் சால அல்லது சால்ரா என்று கூறுவர். இது வடிவில் நடுவில் குவிந்து காணப்படும் இரு தாளங்களின் இடையே ஒரு கயிறு இணைக்கப்படுகின்றது. இவை இரண்டும் ஒன்றோடு ஒன்று சேர்ந்து இசைக்கும் போது நாதம் உருவாகிறது.

5. பம்பை :

இருபறைகள் கொண்டது ஒன்றின் மேல் ஒன்றாக இணைந்து இரட்டையாக கட்டப்பட்டுள்ளது. இதனை நின்று கொண்டே வாசிப்பார்கள். பெரும்பாலும் தெருக்கூத்துகளிலும் கிராம தேவதைகளின் வழிபாட்டின் போதும் வாசிக்கப்படுகின்றது. இதுபோன்ற சமயத்தில்

நாதஸ்வரத்துடன் வாசிக்கப்படும் இதனை திறமையுடன் வாசிப்பவர்கள் இனிய ஒளியால் கேட்போரை கவர்கின்றனர். பம்பை என்பது மாரியம்மன் திருவிழாக்களில் பூசாரிகள் உடுக்கை அடிக்கும் போது இது ஓர் இணைபரையாகும். இதனை சிறு கழியால் சேர்த்து அடிக்கும்போது ஒரு வினோதமான ஒளி உண்டாகும். இதனை வண்ணம் தீட்டி காட்சிக்காக வைப்பர். இது துதி முரசம் சங்கு ஆகிய பிற இசைக்கருவிகளுடன் சேர்ந்து வாசிக்கப்பட்டு வந்துள்ளது. இது ஒரு இணைப்பு பறை கருவி. இது மாரியம்மன் கோவிலில் உடுக்கை உடன் கை சிலம்புடனும் இயக்கப்படுவதாகும். இறைவனை அல்லது இறைவியை ஆவாகனம் செய்யும்போது இந்த கருவி வாசிக்கப்படும். நீண்ட உருண்டை வடிவத்தில் இரண்டு பறைகளை ஒன்றாக இணைத்தது போன்ற தோற்ற முடியதாகும் இரண்டு பறைகளும் ஒரு அடி நீளம் முடியதாக இருக்கும் ஒவ்வொரு பறைக்கும் இரண்டு முகங்கள் உள்ளன இதில் பெரிய பறைக்கு தும்பை என்று பெயர் இது மிகக் கீழ் சுருதி கொண்டது இது மரத்தினால் செய்யப்பட்ட வளைந்த சிறு குச்சியின் துணைகொண்டு அடிக்கப்படும் இப்பறைக்கு வீறுவானம் என்று பெயர். இதில் குறைந்த ஒலி எழும் சிறிய கொட்டு என்று அழைக்கப்படும் மற்றொரு பறை வெண்கலத்தில் உறுதியாக செய்யப்படும்.

6. உறுமி :

உறுமி என்னும் தோற்கருவி இரண்டு முகங்களை உடையது இடை சுருங்கி நிற்கும் இருமுனைகளும் விரிந்திருக்கும் பம்பை என்னும் கருவியை விட சிறிது நீளமானது சுமார் ஒன்றரை அடி நீளம் உள்ள வளைந்து குச்சியை இடது கையில் கொண்டு வாசிப்பர். அது கருவியின் முகத்தில் அடித்து தாக்குவதில்லை இடது முகத்தோலின் கீழும் மேலும் உறைந்து ஒலி எழுப்புகிறது விலங்கு உறுப்புவது போல் ஒளியை உண்டாக்கிறது உரிமையுடன் நாதஸ்வரமும் சிறு பம்பையும் சேர்ந்து வாசிக்கப்படுவதால் உறுமி மேளம் என்று பெயர் பெறுகின்றது உறுமி மேளம் முக்கியமாக சவ ஊர்வலத்தின் போது பயன்படுத்தப்படுகிறது சுப சடங்குகளில் பயன்படுத்துவதில்லை இக்கருவை வாசித்துக் கொண்டே காலில் சிறு சலங்கைகள் கட்டி ஆட படுகின்றன தற்போது உரிமை காட்சி பொருளாக அமைகிறது ஒருவகை முழவு ஆட்டம் ஆகும்.

முடிவுரை :

நாட்டுப்புற பாடல்களில் பயன்படுத்தப்படும் இசைக்கருவிகள் மிகவும் இன்றியமையா தேவையாக விளங்குகின்றது இத்தகைய இசைக்கருவிகள் பார்ப்பவரை ஈர்க்கும் வகையிலும் அமைகிறது இப்போதைய நடைமுறையில் பம்பை உடுக்கை நாதஸ்வரம் தவில் உறுமீவில் குடம் தாளம் போன்றவை இசைக்கருவிகள் நிகழ்ச்சிக்கு பெரிதும் முக்கிய பங்காக விளங்குகின்றன கருவிகள் கதாபாத்திரத்திற்கு ஏற்றவாறு வாசிக்கப்படுகின்றன மெதுவாக ஆடும் இடத்தில் மெதுவாக வேகமாக ஆடும் இடத்தில் வேகமாகவும் வாசிக்கக்கூடிய ஒன்றாகும் பாடல்கள் அந்தந்த கோவில் தெய்வங்களின் வரலாறு பெருமை போன்றவற்றின் கருத்துகளால் ஆக்கப்பட்டிருக்கும் ஊரின் பெருமையை பற்றி கூறும் பாடல்களும் உண்டு நாட்டுப்புற பாடலுக்கு இசைக்கருவிகள் பெரும் பங்கு வகுக்கின்றது கலை உணர்வதற்கு ஒரு உயிர் துடிப்போடும் விளங்குவதாக நாட்டுப்புற இசைக்கருவிகள் இருக்கின்றன இக்கலைகள் பொழுதுபோக்குக்காக நடத்தப்பட்டாலும் அதன் முக்கிய நோக்கம் இறைபணி இறைஅருளைப் பெறுதலை ஆகும்.

துணை நின்ற நூல்கள் :

1. நாட்டியக் கலை - டாக்டர் வே. ராகவன்.
2. Folk dances of South India - hildegrad L.spreen
3. Folk dances of India - Romila chawla
4. Rural rhythms folk dances of India - Rajee Narayan
5. Indian dance mythology and folk dance - jagmohan singh